## மதுரையில், திருமங்கலம் - உசிலம்பட்டி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்:

# அ.தி.மு.க - பா.ஜ.க. துரோகக் கூட்டணியை வீழ்த்த அடுத்த 6 மாதம் விழிப்புடன் செயல்படுவோம்!

## மதுரையில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

மதுரை. செப்.26-

**மதுரையில், திருமங்கலம், உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், "நாம் அடுத்த 6 மாதம் மிகுந்த விழிப்புடன் செயல்பட வேண்டும். மீண்டும் அ.தி.மு.க-வும், பா.ஜ.க.வும் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தார்கள் என்றால், தமிழ்நாட்டிற்கு தேவையில்லாததை கொண்டு வந்து திணிப்பார்கள். அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி, ஒரு துரோக கூட்டணி என்பதை மக்களுக்கு நினைவுப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**



கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

மதுரை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட திருமங்கலம், உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் உங்கள் அத்தனை பேரையும் ஒரே அரங்கத்தில் சந்திப்பது மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. உங்கள் அனைவரையும் அணி, அணியாக சட்டமன்றத் தொகுதி வாரியாக பலமுறை சந்தித்திருக்கிறேன். ஒரே அரங்கத்தில் சந்திக்கின்ற இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு அண்ணன் மணிமாறன் அவர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கூடுதல் பெருமை

பொதுவாக மதுரை மக்கள் என்றாலே, வீரத்துக்கும், பாசத்துக்கும் பெயர் பெற்றவர்கள். அதிலும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், திருமங்கலம், உசிலம்பட்டி பகுதி மக்களின் வீரத்தையும், அன்பையும் வார்த்தையால் சொல்லவே முடியாது. அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த உங்களை எல்லாம் சந்திப்பது எனக்குக் கூடுதல் பெருமை.

சமீபத்தில்தான் மதுரையில் பொதுக்குழுவை அண்ணன் மூர்த்தி அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். இன்றைக்கு அந்தப் பொதுக்குழுவுக்கே போட்டி போல, இந்த ஆலோசனைக் கூட்டத்தை தொகுதி மாநாடாக அண்ணன் மணிமாறன் அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார்.

### ஓரணியில் தமிழ்நாடு

மதுரையில் நடந்த பொதுக்குழுவில்தான் தலைவர் அவர்கள் `ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பை அறிவித்தார். மதுரையில் தொடங்கிய ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பில் கிட்டத்தட்ட 2 கோடி தமிழ் மக்கள் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டுள்ளார்கள். ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு வெற்றிக்கு உழைத்த உங்கள் அனைவருக்கும் முதலில் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி, மக்களை நம் கழகத்தில் இணைத்துள்ளீர்கள். இது சாதாரண விஷயம் இல்லை. அதிலும் குறிப்பாக, ஆளுங்கட்சியாக இருக்கும்போது, மக்களைச் சந்திப்பதற்கு ஒரு தனிதைரியம் வேண்டும். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செய்து கொண்டு இருக்கின்ற நலத்திட்ட பணிகள், மக்கள் பணிகள் தரும் தைரியத்தில், மக்களைச் சந்தித்து, 2 கோடி பேரை நம் கழகத்தில் இணைத்துள்ளீர்கள்.

கலைஞரைப் பற்றி பேசும்போது, பெருமையாகச் சொல்வோம். நின்ற அனைத்து தேர்தலிலும் வென்ற ஒரே தலைவர் கலைஞர் அவர்கள்தான். கழகம் வெற்றி வாய்ப்பை இழந்தாலும், ஆனால், கலைஞர் மட்டும் எங்கு நின்றாலும் வெற்றிப்பெற்று காட்டினார். நம் கழகத் தலைவருக்கும் ஒரு பெருமை உண்டு. அவர் தலைவராகப் பொறுப்பேற்று சந்தித்த அனைத்து தேர்தலிலும் நம் தமிழ்நாட்டு மக்கள் அவருக்கு வெற்றியை மட்டுமே கொடுத்துள்ளார்கள். இது கலைஞரின் பெருமை, தலைவரின் பெருமை என்று சொன்னாலும், அதற்கு முழு காரணம் இங்கு வந்திருக்கின்ற உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான்.

### திட்டங்கள் - சாதனைகள்

இன்றைக்கு இந்தியாவே திரும்பிப் பார்க்கிற மாதிரி ஏராளமான நலத்திட்டங்களை நம் மாநில மக்களுக்குத் தொடர்ந்து செய்து வருகிறார் நம் முதலமைச்சர் அவர்கள். தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதிகளையும் நிறைவேற்றி இருக்கிறோம், சொல்லாததையும் நிறைவேற்றி வருகிறார் நம் தலைவர் அவர்கள். உதாரணத்துக்கு சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

நம் தலைவர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான மகளிர் விடியல் பயணம் திட்டத்திற்குதான். அந்தத் திட்டத்தில் 780 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 வரை சேமித்துள்ளார்கள். இந்த மதுரை மாவட்டத்தில் மட்டும் ஒரு கோடிக்கும் அதிகமான பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

மாணவ, மாணவிகள் பள்ளிப்படிப்பு படித்தால் மட்டும் போதாது. உயர்கல்வி படிக்க வேண்டும் என்று, அரசு பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் சென்று உயர்கல்வி படித்தாலும் அவர்களுக்கு மாணவியாக இருந்தால் புதுமைப்பெண் திட்டம், மாணவனாக இருந்தால் தமிழ்ப்புதல்வன் திட்டம் வாயிலாக மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையை மாணவமாணவிகளுக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கின்ற மாணவர்கள் 45 சதவிகிதத்துடன் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. அதற்குக் காரணம் நம் முதலமைச்சர் திராவிட மாடல் அரசு.

### 66 ஆயிரம் மாணவர்கள்

தமிழ்நாடு முழுவதும் 8 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று இருக்கிறார்கள். இந்த மதுரை மாவட்டத்தில் மட்டும் 66 ஆயிரம் மாணவ - மாணவிகள் தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாகப் பயன் பெற்று வருகிறார்கள்.

பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு திட்டம். குழந்தைகள் பசியுடன் படிக்கக்கூடாது, நிறைந்த வயிற்றுடன் படிக்க வேண்டும் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் காலை உணவுத் திட்டம். 20 லட்சம் குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இந்தத் திட்டத்தை 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி, அண்ணாவின் பிறந்த நாளில் நம் முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இந்த இரண்டு வருடத்தில் கிட்டத்தட்ட ஒரு கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாயை கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக நம் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு மகளிருக்கும் 24 ஆயிரம் ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். இந்த மதுரை மாவட்டத்தில் மட்டும் 4 லட்சத்து 55 மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பயன் பெறுகிறார்கள்.

சிலருக்கு இந்த திட்டம் வரவில்லை என்ற குறைகளும் இருக்கின்றன. உங்களுடன் ஸ்டாலின் முகாம்களை 10 ஆயிரம் முகாம்களை நம் அரசு நடத்த இருக்கிறது. கிட்டத்தட்ட 8,000 முகாம்களை நடத்தி முடித்துவிட்டோம். முடிந்த முகாம்களில் 60 சதவிகிதம் பேர் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைக்குத்தான் விண்ணப்பித்துள்ளார்கள். தலைவர் அவர்கள் அதற்கு விடுத்திருந்த விதிமுறைகளில் சிலவற்றை தளர்த்தி உள்ளார்.

இன்னும் ஓரிரண்டு மாதங்களில் விடுபட்ட மகளிருக்கும் கலைஞர் உரிமைத்தொகை திட்டம் நிச்சயமாக வழங்கப்படும். நான் முதல்வன் திட்டம். மாணவர்கள் என்ன படிக்க வேண்டும், அவருக்கு எதில் ஆர்வம் இருக்கிறது, அவர்கள் எந்தக் கல்லூரியில் சேர வேண்டும், படிப்பை முடித்து அவர்கள் எந்த வேலையில் சேர வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்கும் திட்டம்தான் நான் முதல்வன் திட்டம்.

### உசிலம்பட்டி, திருமங்கலம்

நம் முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிற தொடர் நடவடிக்கையால், இந்தியாவிலேயே வளர்ச்சி அடைந்த மாநிலத்தில் முதலிடத்தில் தமிழ்நாடு வந்துள்ளது. திருமங்கலம், உசிலம்பட்டி தொகுதிக்கு பல திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ளார். அதில் சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். திருமங்கலம் தொகுதியின் நீண்டநாள் கோரிக்கையான திருமங்கலம் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி, 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உங்களின் நீண்டநாள் கோரிக்கையை நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி வைத்துள்ளார்கள். பேரையூரில் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில், புதிய நீதிமன்ற வளாகம். செக்கானூரணியில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து கட்டும் பணிகள் நடந்துகொண்டு இருக்கின்றன. திருமங்கலம் நகரின் விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டு 53 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒள்ளிபள்ளம் குடிநீர் திட்ட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரு கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில், திருமங்கலம் நகரில் தினசரி காய்கறி சந்தை, திருமங்கலம் பேருந்து நிலையம் விரிவாக்க பணி, 38 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருமங்கலம் நகரம், கல்லுப்பட்டி பேரூர், பேரையூர், ஏழுமலை பேரூர் ஆகிய இடங்களில் திடக்கழிவு மேலாண்மை பணிகள், அரசு மருத்துவமனையில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழந்தைகள் பிரிவு, கள்ளிக்குடி ஒன்றியம், எஸ்.பி.நத்தம், வீரபெருமாள் கிராம மக்களின் கோரிக்கைக்கு இணங்க 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இணைப்பு பாலம்.

உசிலம்பட்டி தொகுதியில் பெரியவர் மூக்கையா தேவர் அவர்களுக்கு 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மணிமண்டபம் கட்டுகின்ற பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. உசிலம்பட்டியில் 8 கோடி ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது. 3 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சரின் மினி ஸ்டேடியம் கட்டும் பணி விரைவாக நடந்து கொண்டு இருக்கிறது. வீரபெருமாள்பட்டியில் அரசு கள்ளர் உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு கோடியே 97 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இந்தப் பணிகள் இல்லாமல் உங்களின் மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மணிமாறன் அவர்கள் அவரின் சொந்த நிதியில் ஏகப்பட்ட நலத்திட்டங்களை இந்த மாவட்ட மக்களுக்குச் செய்து வருகிறார். யோசித்துப் பாருங்கள். நமக்கு சட்டமன்ற உறுப்பினர் இல்லாதபோதே இவ்வளவு திட்டங்களை நம் முதலமைச்சர் தருகிறார்கள் என்றால், நாளை இந்த இரண்டு தொகுதிகளுக்கும் நம் சட்டமன்ற உறுப்பினர்கள் வந்துவிட்டார்கள் என்றால், இன்னும் பல்வேறு திட்டங்களை, ஒவ்வொன்றையும் கேட்டு, உரிமையோடு வாங்கி கொடுப்பார்கள். அதை மனதில் நீங்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.

### துரோக கூட்டணி

எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் மக்களைக் காப்போம், தமிழ்நாட்டை மீட்போம் என்று பிரச்சாரம் செய்கிறார். முதலில் அவர் அ.தி.மு.க-வை, பா.ஜ.க-விடமிருந்து மீட்டாக வேண்டும். எனவே, நாம் அடுத்த 6 மாதம் மிகுந்த விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். மீண்டும் அ.தி.மு.க-வும், பா.ஜ.க.வும் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்தார்கள் என்றால், தமிழ்நாட்டிற்கு தேவையில்லாததை கொண்டு வந்து திணிப்பார்கள். அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி, ஒரு துரோக கூட்டணி என்பதை மக்கள் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளார்கள். அதை நாம் மக்களிடம் நினைவுப் படுத்திக்கொண்டே இருக்க வேண்டும்.

இங்கு பூத் கமிட்டி உறுப்பினர்கள் வந்திருக்கிறீர்கள். உங்களின் பணி மிகமிக முக்கியம். ஒரு வாக்கைக் கூட தவறவிடக்கூடாது. வாக்காளர் பட்டியலை அடிக்கடி சரிபார்க்க வேண்டும். ஏனென்றால், பா.ஜ.க. வட மாநிலங்களில் பல தில்லுமுல்லு களைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால், தி.மு.க காரன் தேர்தல் வேலை என்று வந்துவிட்டால் ஒரு சிங்கிள் டீயை குடித்துக் கொண்டு, பத்து நாள்கள்கூட விழித்திருந்து வேலை செய்வான் என்பது அவர்களுக்குத் தெரியாது. நான் இன்று இங்கு பேசிவிட்டு, நாளை வேறு தொகுதிக்குச் சென்று விடுவேன். ஆனால், இங்கு வந்திருக்கின்ற நீங்கள் அடுத்த ஆறு மாதம் இந்தத் தொகுதியில் இருந்து, பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டிய கடமை உங்களிடம் இருக்கிறது.

### திண்ணைப் பிரச்சாரம்

திண்ணைப் பிரச்சாரம் செய்யுங்கள். அடுத்த ஆறு மாத காலம் நமக்குள் இருக்கின்ற மனக்கசப்புகளை எல்லாம் மறந்துவிடுங்கள். நமக்கு இருப்பது ஒரே ஒரு குறிக்கோள். 2026 சட்டமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று, இந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் வெற்றி என்ற வரலாற்றை நாம் உருவாக்க வேண்டும்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், மதுரை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மணிமாறன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முத்துராமலிங்கம், லதா அதியமான், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா, தொகுதிப் பார்வையாளர்கள் அலாவுதீன், செல்லதுரை, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் கொடி சந்திரசேகர், அருள், மாவட்டக் கழக நிர்வாகிகள் நாகராஜன், சிவனாண்டி, இள.மகிழன், சரவணகுமார், சிவமுருகன், ஆதிமூலம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சிவனேசன், தனபாண்டியன், தங்கபாண்டி, சண்முகம், ராமமூர்த்தி, மதன்குமார், பாண்டியன், நாகராஜன், தனசேகரன், எம்.பி.பழனி, அஜித் பாண்டி, எஸ்.பி.எஸ்.முருகன், சுதாகரன், முத்துராமன், ஜெயச்சந்திரன், செல்வ பிரகாஷ், சங்கரபாண்டி, நகரக் கழகச் செயலாளர்கள் தங்கபாண்டி, ஸ்ரீதர், பேரூர் கழகச் செயலாளர்கள் ஜெயராமன், வரிசை முகம்மது, முத்து கணேசன், திருமங்கலம் நகர் மன்றத் தலைவர் ரம்யா முத்துக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் விமல், ஜெயச்சந்திரன், மோகன், குபேந்திரன், விஜய், பாண்டி முருகன், ஞானசேகர், சுரேஷ், பெரியசாமி, விநாயகமூர்த்தி, பரமசிவம், மைதீன் பிச்சை, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சுரேஷ், காளிதாஸ், ஆதவன் அதியமான், ஜெகதீஷ், ஜெகநாதன், சாதிக் மொய்தீன், ராஜதுரை உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## உணர்வுபூர்வமான நம் நிர்வாகிகளை மீறி, அவர்களால் என்ன செய்து விட முடியும்?

### கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதல்வர் பதில்!

**நிகழ்ச்சியின் நிறைவுப் பகுதியாக கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அளித்த பதில்களின் விவரம் வருமாறு:**

**முத்துவேல், சேடப்பட்டி தெற்கு ஒன்றியம் :**

**தமிழ்நாடு முழுவதும் கிளைக் கழகத்தின் மூலம் திராவிடப் பயிற்சிப் பாசறைகளை ஊக்குவிக்கப்படுமா? மேலும் கிளைக் கழகத்தின் மூலம் மாதந்தோறும் சொற்பொழிவுகள் நடத்தப்படுமா?**

**துணை முதலமைச்சர்:** இது மிகச்சிறந்த யோசனை. குறிப்பாக, இப்போது தமிழ்நாட்டுக்குள் புதிதாக வந்துள்ள இயக்கங்களுக்கு எந்தக் கொள்கையும் கிடையாது. அ.தி.மு.க-வுக்கும் கொள்கை கிடையாது. தி.மு.க-வை எதிர்ப்பது மட்டும்தான் அ.தி.மு.க-வின் கொள்கை. கொள்கை என்றால், என்னவென்று தெரியாத இளைஞர்கள், புது இயக்கங்களில் சென்று சேர்கிறார்கள். நாம் மொழி உரிமைக்காகவும், மாநில உரிமைக்காகவும், என்னவெல்லாம் செய்திருக்கிறோம், உயிர்தியாகம், போராட்டங்கள் எல்லாம் செய்திருக்கிறோம் என்பதை இளைஞர்களிடம் பேசுங்கள்.

கண்டிப்பாக கழகத்தின் மூலம் இதை நடைமுறைப்படுத்த அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொள்வேன் என்று கூறிக்கொள்கிறேன். இளைஞர் அணியின் சார்பாக, சென்ற வருடம் பயிற்சிப் பாசறைக் கூட்டங்களை, தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துத் தொகுதிகளிலும் நம் இளைஞர் அணி தம்பிமார்கள் நடத்தி காட்டினார்கள்.

**ஜஸ்டின் திரவியம்**

**கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கழகத்தில் ஆர்வமுடன் இணையும்படியான திட்டங்கள் அறிவிக்கப்படுமா?**

**துணை முதலமைச்சர்:** இளைஞர்களுக்கு, மாணவர்களுக்கு பல்வேறு திட்டங்களை, நம் அரசு செய்திருக்கிறது. தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண் போன்ற எண்ணற்றத் திட்டங்களை, மாணவச் செல்வங்களுக்காக நம் தலைவர் அவர்கள் உருவாக்கி கொடுத்திருக்கிறார்கள். எதிர்காலத்திலும் இளைஞர்களின் வாழ்க்கைக்கு எப்போதுமே நம் முதலமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருப்பார். இதை மாணவர்களிடமும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**அம்சராஜன், திருமங்கலம்.**

**வாக்காளர் பட்டியல் திருத்தம் மேற்கொள்ளும்போது கழக நிர்வாகிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். வாக்காளர் சேர்க்கை மற்றும் நீக்கத்தில் தவறுகள் நடைபெறாமல் இருக்க ஆலோசனைகள் வழங்கப்படுமா?**

**துணை முதலமைச்சர்:** அதற்காகத்தான் வழக்கறிஞர்கள் அணி மூலமாக, ஒரு குழுவை நம் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்துள்ளார். அவர்களிடம் நீங்கள் முறையிட்டீர்கள் என்றால், அதற்கான வழிமுறைகளெல்லாம், அறிவாலயத்திலிருந்து வழி காட்டப்படும். பீகார் போன்ற மாநிலங்களில் பல்வேறு முறைகேடுகளை, ஒன்றிய அரசு செய்துகொண்டிருக்கிறது. உணர்வுபூர்வமான நம் நிர்வாகிகளை மீறி, அவர்களால் என்ன செய்து விட முடியும் என்பதை களத்தில் நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

**செல்வராஜ், திருமங்கலம்.**

**எதிர்வரும் தேர்தலில் திருமங்கலம் தொகுதிக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படுமா?**

**துணை முதலமைச்சர்:** நிச்சயம் திருமங்கலம் தொகுதிக்குக் கூடுதல் கவனம் இருக்கும். இனிமேல் அடிக்கடி இந்த திருமங்கலம் தொகுதிக்கு வருவேன். நம் தலைவர் அவர்கள் நமக்கு கொடுத்திருக்கின்ற இலக்கு 200 தொகுதி. இந்த இரண்டு நாட்களில் மட்டும் பொதுமக்கள், கழக நிர்வாகிகளை சந்திக்கிறேன். கழக நிர்வாகிகள், பொதுமக்களின் உற்சாகத்தை, மகிழ்ச்சியைப் பார்க்கும்போது, 200 இல்லை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிப் பெறும். அதற்கு தொடக்கமாக திருமங்கலம், உசிலம்பட்டி தொகுதிகள் வெற்றி அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2026-ல் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், நம் கழகத் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்றால், நாம் அனைவரும் களத்தில் இறங்கி, மக்களை சந்தித்து நம் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு.